நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 (CCIW), மதுரை.
முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்எல்பி.,
நீதித்துறை நடுவர் எண்.3, மதுரை.
2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
சி.ஆர்.எம்.பி. எண். 1130/2020

. . . . .

1. பி.பத்மா
க.பெ. பாலமுருகன் . . . மனுதாரர்/8வது எதிரி

// எதிரிடை //

அரசுக்காக: காவல் ஆய்வாளர்
வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவு
திண்டுக்கல் காவல் நிலைய குற்ற எண்.2/2020
பிரிவு 406, 408, 409, 468, 471,
477(A) r/w 120(B) IPC . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/8வது எதிரி குவிமுச பிரிவு 437-ன்கீழ் பிணை கோரி மீண்டும் மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.ரவி அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் காணொளி மூலம் கேட்கப்பட்டு, இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

1. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 11.08.2020 முதல் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும், இவ்வழக்கில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக, இம்மனு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2. அரசு தரப்பில் எதிரி டி.டி.524 பழனி சரகம், மணியகாரன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர் என்றும் மற்ற நிர்வாக குழு உறுப்பினர்களுடன் சேர்ந்து 30.09.2016 முதல் 13.07.2018 வரையிலான காலங்களில் குற்ற இனம்-1ல் பயிர்க்கடன் ரூ.26,79,155/-ஐ கடன் பட்டுவாடா செய்யப்பட்டதாக போலியான பதிவுகள் பொய்கணக்கு மேற்கொள்ளப்பட்டும், 14 உறுப்பினர்களுக்கு தெரிவிக்காமல் இந்த எதிரி போலி கையொப்பங்கள் போட்டுள்ளதாகவும், குற்ற இனம்-2ல் சுயஉதவி குழுக்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையைவிட ரூ.9லட்சம் வழங்கியதாக பொய் கணக்கு எழுதி கையாடல் செய்தும் குற்ற இனம்-3-ல் ரூ.10லட்சம் பணம் அடமான பொருட்கள் இல்லாமல் எதிரி பத்மா, தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கடன் தொகை வழங்கியதாக பொய்க்கணக்கு எழுதி எதிரிகள் அனைவரும் மோசடி செய்து கடன் சங்கத்திற்கு நிதியிழப்பு

ஏற்படுத்தியுள்ளதாகவும், குற்ற இனம்-4-ல் அடமானக்கடனில் வரவான தொகை ரூ.3,22,985/- சங்கத்தில் வரவு வைக்காமல் 1வது எதிரி முறைகேடு செய்துள்ளதாகவும் இவ்வழக்கில் எதிரிகள் போலி பதிவு மேற்கொண்டு பொய் கணக்கு எழுதியும், வழங்கப்பட்ட தொகையினை அடித்து திருத்தி பொய் கணக்கு எழுதியும், வரவான தொகையினை சங்க கணக்கில் வரவு வைக்காமல் மொத்த தொகை ரூ.49,02,140/-ஐ கையாடல் செய்து சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாகவும் எதிரியை பிணையில் விட்டால் சம்பந்தப்பட்ட சாட்சிகளை கலைத்து புலன் விசாரணைக்கு இடையூறு செய்யக் கூடும் என்பதாலும், வழக்கின் ஆவணங்களை அழித்து விடுவார் என்பதாலும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பல எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாலும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3. இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் அரசு தரப்பில் கூறப்பட்ட ஆட்சேபணை ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் இந்த எதிரி கூட்டு சதி செய்து சங்கத்தின் பணம் ரூ.49,02,140/-ஐ சங்கப்பதிவேடுகளில் பொய்க்கணக்கு எழுதியும், அழித்து திருத்தியும், சங்க பதிவேடுகளில் வரவு வைக்காமாலும் நம்பிக்கை மோசடி செய்து கையாடல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், ஆவணங்களை கைப்பற்ற வேண்டி உள்ளதை கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் கூறியது போல் மனுதாரர்/எதிரி அதே சங்கத்தில் நிர்வாக குழுவில் உறுப்பினராக உள்ளதாலும், எதிரியை பிணையில் விட்டால் ஆவணங்களை அழித்து விடுவார் என்பதாலும், சாட்சிகளை கலைத்து விடுவார் என்பதாலும், புலன் விசாரணை நிலுவையில் உள்ளதாலும், மேலும் பல எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாலும், முந்தைய மனுவில் குறிப்பிட்டுள்ள சாராம்சத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாததாலும் (No change of circumstances) மனுதாரர் குறிப்பிடும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என கருதி இந்நீதிமன்றம் இம்மனுவினை மீண்டும் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

என்னால் 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ஆம் நாள் அவையறிய பகிரப்பட்டது.

ஒம்/- எஸ். சந்திர சேகர்
நீதித்துறை நடுவர் எண்.3
(CCIW), மதுரை.